# 13 திருஞானசம்பந்தர்



| | |
|---|---|
| நாடு | சோழ நாடு |
| ஊர் | சீர்காழி |
| தந்தை பெயர் | சிவபாதவிருதயர் |
| தாய் பெயர் | புகவதி அம்மையார் |
| அவதரித்த நாள் | ஆதிரை நன்னாள் |
| இயற்பெயர் | சம்பந்தன் |
| மறுபெயர்கள் | ஆளுடைய பிள்ளையார் , திருஞான சம்பந்தர் பாலறவாயர் , பரசமய கோளரி |
| பாடிய திருமுறைகள் | 1ஆம் 2ஆம் 3ஆம் திருமுறை |
| முதற்பாடிய தேவாரம் | தோடுடைய செவியன் |
| தேவாரம் பாடிய வயது | மூன்று வயது |
| நின்ற நெறி | கிரியை |
| நின்ற மார்க்கம் | சற்புத்திர மார்க்கம் |
| மார்க்க விளக்கம் | இறைவனை தந்தையாகவும் தன்னை மகனாகவும் கருதல் |
| முத்தி பெற்ற தினம் | வைகாசி மூலம் |
| முத்தி பெற்ற வயது | 16 |
| பெற்ற முத்தி | சாமீபம் |
| இறுதியாக பாடிய பதிகம் | காதலாகி கசிந்து |

## பாடிய தேவாரங்களும் அற்புதங்களும்

➢ **“ தோடுடைய செவியன்.....’’**

உமா தேவியார் கொடுத்த திருமுலைப் பாலைப் பருகிய பின் தந்தையார் யார் உனக்குப் பால் கொடுத்தவர் என அதட்டிய போது அடப வாகனத்தில் சிவபெருமான் உமாதேவியாரைச் சுட்டிக் காட்டிய போது பாடப்பட்டது.



❖ **ஆளுடைய பிள்ளை** - இறைவனால் ஆட்கொள்ளப்பட்டமையால்

❖ **திருஞானசம்பந்தர்** – சிவஞான சம்பந்தம் பெற்றமையால்

➢ **தேவாரம்** - “ மடையில் வாளை…”

**இடம்** - திருக்கோலக்கா

**சந்தர்ப்பம்** - ஐந்தெழுத்துப் பொறிக்கப்பட்ட பொற்றாளம் பெற்ற போது



➢ திருவெருக்கத்தம்புலியூரில் வாழ்ந்த திருநீலகண்டப் பெரும்பாணரும் மதங்க சூளாமணியும் சீர்காழி வந்து சம்பந்தரை வணங்கிப் பாடினர்.

➢ மகிழ்ந்த சம்பந்தர் தாம் பாடும் பதிகங்களை யாழில் இசைக்குமாறு பாணர்க்கு அருள் செய்தார்.

தேவாரம் - “எந்தை ஈசன் எம்பெருமான்…”

இடம் - மாறன் பாடி

சந்தர்ப்பம் - திருவரத்துறையை வணங்க நடந்து சென்ற போது முத்துச் சிவிகை, முத்துக் குடை, முத்துச் சின்னம் என்பன கிடைக்கப் பெற்றபோது





தேவாரம் - “ துணிவளர் திங்கள்……”

இடம் - திருப்பாச்சிலாச்சிரமம்

சந்தர்ப்பம் - கொல்லிமழவன் என்ற அரசனின் மகளின் , முயலகன் நோயினை நீக்கப் பாடியது.

➢ **தேவாரம்** - " அவ்வினைக்கிவ்வினை…"

**இடம்** - செங்குன்றூர்

**சந்தர்ப்பம்** - பனியின் கொடுமையால் தம் அடியார்களும் பிறரும் குளிர்ச்சுரத்தால் வருந்துவதைக் கண்டு பாடியது.



**தேவாரம்** - " இடரினும் தளரினும்…"

**இடம்** - செங்குன்றூர்

**சந்தர்ப்பம்** - தந்தையார் யாகம் செய்வதற்கு சிவனருளால் ஆயிரம் பொன் பெற்றுத் தந்தைக்குக் கொடுத்தல் .

➢ **தேவாரம்** - " சடையா யெனுமால்…"

**இடம்** - திருமருகல்

**சந்தர்ப்பம்** - அரவு தீண்டி இறந்து கிடந்த வணிகனை உயிர்ப்பிக்க பாடப்பட்டது.






**தேவாரம்** - " வாசி தீரவே காசு நல்குவீர்…"

**இடம்** - திருவீழிமிழலை

**சந்தர்ப்பம்** - மாரிவளம் குன்றி பஞ்சம் ஏற்பட்டு பசிப் பிணியால் வருந்திய அடியார்களுக்கு படிக்காசு பெற்று அமுது செய்வித்தல்.




**தேவாரம்** - " சதுரம் மறை …"

**இடம்** - திருமறைக்காடு

**சந்தர்ப்பம்** -
திருமறைக்காடடில் திருநாவுக்கரசர் திறந்த கததவை திருஞான சம்பந்தர் பதிகம் பாடி மூடச் செய்தல்.





**தேவாரம்** - " செய்யனே திருவாலவாய் …"

**இடம்** - மதுரை

**சந்தர்ப்பம்** - சம்பந்தர் மதுரை மடத்தில் தங்கியிருந்த போது

மன்னன் ஒப்புதலுடன் சமணர்கள் மடத்துக்குத் தீயிட்டபோது பாடப்பட்டது

அப்போது அத்தீயானது தணிந்து வெப்பு நோயாகச் சென்று பாண்டியனை வருத்தியது.



**தேவாரம்** - " மந்திமைாவது நீறு……."

**இடம்** - மதுரை

**சந்தர்ப்பம்** - சிவபெருமானை வணங்கி பாண்டியனுக்கு திருநீறு அணிவித்து பாடிய போது பாண்டியனின் வெப்பு நோய் தீர்ந்தது..

# சமணர்களுடன் அனல் ( தீ ) வாதம் , புனல் (நீர் ) வாதம்







**அனல் வாதம்**

- ✓ பிள்ளையார் " **போகமார்ந்த பூண்முலையாள்....**" என்ற பதிகம் எழுதப்பட்ட ஏட்டைத் தீயிலிட்டபோது அவ்வேடு எறியாது பசுமையாக இருந்தது.
- ✓ சமணர்கள் இட்ட ஏடு எறிந்து சாம்பலாகியது.

**புனல் வாதம்**

- ✓ பிள்ளையார் " வாழ்க அந்தணர்...." என்ற பதிகம் எழுதப்பட்ட ஏட்டை வைகையில் இட ஆற்றோட்டத்தை எதிர்த்துச் சென்றது.
- ✓ சமணர்கள் அத்தி நாத்தி என்று எழுதிய ஏட்டை வைகையில் இட அவ்வேடு ஆற்றோடு சென்றது.

- ➢ "வாழ்க அந்தனர்....." என்ற பதிகத்தில் **'வேந்தனும் ஓங்குக'** என்று அருளியமையால் பாண்டியனது கூன் நிமிர்ந்தது. அவன் சைவத்தை தழுவினான்.
- ➢ திருக்கேதீஸ்வரம் , தீருக்கோணேஸ்வரம் என்னுந் தலங்களை வணங்கித் திருப்பதிகம் பாடியருளினார்.







**தேவாரம்** - " மட்டிட்ட புன்னை..."

**இடம்** - திருமயிலாப்பூர்

**சந்தர்ப்பம்** - பாம்பு தீண்டி இறந்த சிவநேசன் மகள் பூம்பாவையை "மட்டிட்ட புன்னை..." என்ற பதிகம் பாடி உயிர்ப்பித்தார்.



- **தேவாரம்** - " கல்லூர்ப் பெருமணம்......"

  **இடம்** - சீர்காழி

  **சந்தர்ப்பம்** - திருமண நாளன்று மணமகளைக் கையிற் பிடித்து அக்கினியை வலம் வரும் போது பாடப்பட்டது.

- **தேவாரம்** - " காதலாகிக் கசிந்து......"

  **இடம்** - சீர்காழி

  **சந்தர்ப்பம்** - ' காதலியும் நீவிரும் திருமணம் காணவந்தோர் அனைவரும் நம்பாற் சோதியிற் கலமின்" என்று ஒலி கேட்டபோது பாடப்பட்டது

# நன்றி

*தொகுப்பு*


**திரு. ஆர். இரவிச்சந்திரம்** கே/ தெஹி /ஶ்ரீ கலைவாணி வி, ருவன்வெல்ல.
**திருமதி. டீ. கஸ்தூரிகாந்தி** கே/ தெஹி /நவபொலடகம த.வி, யட்டியாந்தோட்டை